**O.S.No. 120/2017**

**Date:25.10.2025**

**பி.வா.சா 1 சண்முக வடிவு**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வீடு கட்டியுள்ள இடம் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது மாமியார் சரஸ்வதிக்கு பாத்தியப்பட்டது அவருக்கு பின்னர் எனது கணவரின் சகோதரர் ராஜேந்திரன் சொத்தை அனுபவம் செய்து வந்தார், அதன்பின்னர் எனக்கு கிரையம் செய்து கொடுத்தார். எனது மாமியார்ருக்கு மொத்தம் 1 ½ செண்ட் பாத்தியப்பட்டது. அதில் ராஜேந்திரன் ½ செண்ட் நிலத்தை எனக்கு எழுதி கொடுத்தார். மீதி 1 செண்டு எனது கணவருக்கு பாத்தியப்பட்டது. எனது கணவர் மற்றும் எனது மாமியார் சேர்ந்து தான் மேற்படி 1 செண்ட் நிலத்தினை இராமர் பாண்டியன் என்ற குசேலன் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள். எனது கணவர் பெயர் கருப்பசாமி. நான் கிரையம் பெற்ற பி.வா.ச.ஆ.1 க்கு முந்தைய நாள் மேற்படி 1 செண்ட் இராமர் பாண்டியனுக்கு கிரையம் எழுதி கொடுக்கப்பட்டது. பொதுவாக எனது கணவர் மற்றும் எனது மாமியாருக்கு பொய்யான ஆவணங்கள் எழுதி கொடுக்கும் பழக்கம் கிடையாது. மொத்தமாக இருந்த 1 ½ செண்ட் நிலத்தில் 2 வீடுகள் இருந்தது. நான் எனது எதிர் வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எனது கணவரும் எனது மாமியாரும் இராமர் பாண்டியனுக்கு விற்ற விபரத்தினை கூறியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இராமர் பாண்டியனுக்கு எழுதி கொடுக்கப்பட்ட கிரைய ஆவணத்தினை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது.

பி.வா.சா.1 ஆவணத்தில் பூர்வீகமாகவும் எனது பங்கிற்கு கிடைத்தும் என்று குறிப்பிட்டுள்ளது அது எப்போது பங்கு பாகம் நடைபெற்றது என்றால் 2005ம் ஆண்டு நாங்களாகவே ஆளுக்கொரு வீட்டில் தனித்தனியாக இருந்து கொண்டோம். 19.04.2007ல் என் கணவரும் எனது மாமியாரும் இராமர் பாண்டியனுக்கு கிரையம் கொடுத்த ஆவணத்தில் மொத்த சொத்தில் பிரிவின்றி 3ல் 2 பங்கு என்று காட்டி தான் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான் அவ்வாறு தான் கொடுத்துள்ளார். என்குடும்பத்திற்கு மொத்த சொத்தும் பாத்தியப்பட்டு இருந்ததால் தான் மொத்த சொத்தை காண்பித்து 3ல் 2 பங்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா. 2 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள அப்ரானந்தம் பிள்ளை உங்களுக்கு என்ன வேண்டும் என்றால் என் மாமியாருக்கு தந்தை. எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட மொத்த சொத்துக்கள் அப்ரானந்தம் பிள்ளைக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வீடு கட்டும் போது முறையாக அனுமதி வாங்கி தான் கட்டினீர்காளா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 2017ம் வருடம் வீடு கட்டினேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 முன்காப்பு மனு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் நான் வீடு கட்டி கொண்டிருக்கும் போது தாக்கல் செய்தேன். வா,சா.ஆ.6 முன்காப்பு மனு தாக்கல் செய்து விட்டு தான் 2ம் தபசில் பொது பாதையில் வாசல் மற்றும் ஜன்னல் ஏற்படுத்தினேனா என்றால் நான் ஏற்கனவே இருந்த இடத்தில் தான் ஏற்படுத்தினேன். என்னுடைய வீட்டின் கீழ்பக்க சுவரில் 2 ஜன்னல்கள் ஏற்படுத்தியுள்ளேன்.

ஜன்னலின் கிழக்கு நோக்கி 2 அடி அகலத்தில் 3 அடி நீளத்தில் 2 சன் சைடுகள் ஏற்படுத்தப்பட்டது. நிலைக்கு மேல் 2 அடி அகலம் 5 அடி நீளத்தில் 2 சன் சைடுகள் ஏற்படுத்தப்பட்டது. சன்சைடுக்கு முன்பு பொதுப்பாதை கீழ்புறத்தில் வாசல் பக்கத்தில் 2 அடி உள்ளது. நான் மேற்சொன்ன அந்த 2 அடி இடத்திற்குள்ளாக தான் வாதி மற்றும் 2 முதல் 7 பிரதிவாதிகள் நடந்து சென்று கொள்ளவேண்டும் என்றால் சரிதான் எனது வாசலை தாண்டி தெற்கு பக்கம் செல்ல செல்ல சுமார் 6 அடி இருக்கும். நான் சொல்வது போல் அங்கம்மாள் வீட்டு பக்கத்தில் 6 அடி உள்ளதா என்று கேட்டால் அங்கம்மாள் வீட்டிற்கு வடக்கு பக்கம் 6 அடி உள்ளது. எனது வீட்டின் சன்சைடு சர்வே எண்.996/31 பொதுப்பாதையில் தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் சொல்லக்கூடிய இடம் அதற்கு வடபுறம் உள்ள இடமும் சேர்ந்து ஒரே இடமாக இருந்து அதன் வடபக்கம் இருக்கும் தெருவினை நோக்கி வாசல் வைத்து அனுபவித்து வரப்பட்டது என்றால் சரியல்ல. வடபக்கமும் வாசல் உள்ளது கீழ்பக்கமும் வாசல் உள்ளது. கீழ்பக்கத்தில் உள்ள வாசல் நான் திருமணம் ஆகி வருவதற்கு முன்பாகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2ம் தபசில் சொத்தினை நோக்கி எவ்வித வாசல்களும் 2017க்கு முன்பாக இருந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தானது வாதிக்கும், 2 முதல் 7 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொதுப்பாதையாகும் என்று சொன்னால் சரியல்ல. வாதி குருசாமி 2ம் தபசில் சொத்தினை அவரது பங்கினை பொறுத்து கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

வாதி வீட்டிற்கு மேல்புறம் உள்ள சந்தானது அதற்கு மேற்புறம் இருக்கக்கூடிய உரிமையளாருக்கு பாத்தியப்பட்ட சந்து அதற்கும் 1ம் தபசில் சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியமில்லாத 2ம் தபசில் சொத்தினை நோக்கி நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் வாதி மற்றும் 2 முதல் 7 பிரதிவாதிகள் அவர்களின் சொத்துக்களுக்கு செல்வதற்கு சிரமம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராது பிளானில் IF புள்ளிகளுக்கு தெற்கே இருக்கக்கூடிய பகுதியானது வாதி மற்றும் 2 முதல் 7 பிரதிவாதிகளுக்கு பொது முற்றமாகதான் அனுபவித்து வரப்படுகிறது என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தில் உள்ள 3 அடியில் நான் 2 அடியை ஆக்கிரமிப்பு செய்துவிட்டதால் வாதி மற்றும் 2 முதல் 7 பிரதிவாதிகள் அவர்களின் சொத்துக்களுக்கு செல்வதற்கு சிரமம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இராமர் பாண்டியனுக்கு எனது கணவர் மற்றும் எனது மாமியார் எழுதி கொடுத்த கிரைய ஆவணதின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய இயலாது. மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தால் எனக்கு பாதகமாகிவிடும் என்பதால் தான் நான் தாக்கல் செய்ய மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் செய்துள்ள ஆக்கிரமிப்பு சட்ட விரோதமானது என்பதால் அதனை அகற்றி தர கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் உங்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்பதால் வாதியை கட்டுப்படுத்த கூடியது அல்ல என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட சொத்திற்கும், 2ம் தபசில் சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் எந்த காலத்திலும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. ஆதலால் வாதி மற்றும் 2 முதல் 7 பிரதிவாதிகளுக்கு 2ம் தபசில் சொத்து பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. அதேபோல் 3ம் தபசில் சொத்தை பொறுத்து வாதி கோரிய வலியுறுத்து கட்டளை பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.